தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
ஆலோசனை சுற்றறிக்கை 2004/நூல/02(அ) (திருத்தியமைக்கப்பட்ட 2023)

# பாடசாலை / கல்வியல் கல்லூரி நூலகங்களில் “தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித்திட்டம்” இனை நடைமுறைப்படுத்தல்.

## 01. அறிமுகம்

2004 ஆம் ஆண்டு முதல் ஒக்டோபர் மாதத்தினை தேசிய வாசிப்பு மாதமாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. 2023 ஒக்டோபர் மாத தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் முகமாக விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விசேட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு சகல பாடசாலை மற்றும் கல்வியியல் கல்லூரி நூலகங்களிடமும் கோரப்பட்டுள்ளன. “உலகம் வாசிப்பவருக்கே சொந்தமானது” என்ற தொனிப்பொருளை அடிப்படையாக் கொண்டு இவ் வருட தேசிய வாசிப்பு மாத செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## 02. செயற்திட்டக் குழு

இந் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைப்பு செய்வதற்காக வாசிப்பு மாதத்தின் செயற்திட்டக் குழுவொன்றினை நியமிப்பது உசிதமானது. தற்போது நூலகத்தில் நூலகக் குழுவொன்று காணப்படுமாயின் அக் குழுவின் ஊடாக வாசகர் வட்டத்தின் ஒத்துழைப்புடன் இந் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இதன் பொருட்டு பிரதான செயற்பாட்டுக் குழுவொன்றினை நியமித்துக் கொள்வதும் உசிதமானதாக அமைந்திருக்கும். அதன் கட்டமைப்பு கீழ்வருமாறு அமைந்திருத்தல் வேண்டும்.

- அதிபர் அல்லது பிரதி அதிபர் – குழுத் தலைவர்
- நூலகர் அல்லது ஆசிரிய நூலகர் அல்லது நூலகப் பொறுப்பாளர் – குழுச் செயலாளர்
- அதிபரினால் பரிந்துரைக்கப்படும் இரு ஆசிரியர்கள்
- ஆசிரிய சங்கத்தின் இரு உறுப்பினர்கள்
- இரண்டு மாணவப் பிரதிநிதிகள்

## 03. நடைமுறைப்படுத்தக் கூடிய விசேட செயற்திட்டங்கள்

- பாடசாலை / கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கு வாசிப்பு தொடர்பான விசேட நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்.
    - சரியான வாசிப்பு முறைகள் அறிமுகம் செய்தல்.
    - புத்தக அணுகுமுறையை அறிமுகம் செய்தல்.
    - பளனுள்ள மற்றும் திறமையான இணையத்தள ஆய்வு மற்றும் கல்வியியல் நிறுவனங்கள் பற்றிய சரியான தகவல்களை ஆய்வு செய்து அது பற்றி வாசகர்களுக்கு அறியத் தருதல்.
    - இரசனை மற்றும் விமர்சனப் புத்தகங்களின் குறிப்புகளுக்காக வாசகர்களுக்கு வழிகாட்டுதல்.
- பாடசாலை / கல்வியியல் கல்லூரி மாணவர்களின் தகவல் தேவைகளைப் பூர்த்தி செய்ய தேவையான வசதிகளை வழங்குதல்.

- நூலகத்துடன் இதுவரை தொடர்புகொள்ளாத பாடசாலை / கல்வியியல் கல்லூரி மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களைத் தொடர்பு கொள்வதற்கான செயற்திட்டங்களை மேற்கொள்ளல்.
- வாசிப்பு ஊக்குவிப்புப் போட்டிகளை ஒழுங்கமைத்தல்.
- பாடசாலை / கல்வியியல் கல்லூரியின் சிறந்த வாசகரைத் தெரிவு செய்தல்.
- அனைத்து மாணவர்களினதும் வீட்டில் வீட்டு நூலகத்தை தொடங்க மாணவர்களை ஊக்குவித்தல் மற்றும் திட்டங்களை செயல்படுத்துதல்.
- சிறுவர்களின் இரசனையை அதிகரிக்கும் பொருட்டு பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.
- வாசிப்பை ஊக்குவிப்பதற்காக இப் பிரதேசத்திலுள்ள பிற நூலகங்களுடன் கூட்டுறவு செயற்திட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் அது தொடர்பான கவர்ச்சிகரமான செயற்திட்டங்களை ஒழுங்கமைத்தல்.
- மாணவர்களின் ஆக்கப்பூர்வத் திறமையை எடுத்துக் காட்டும் படைப்புக்களை உள்ளடக்கிய சஞ்சிகைகள் , சுவர் செய்தித்தாள்ளை வெளியிடுதல்.
- மாணவர்களின் மொழித் திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்துதல். இலவசமாக கற்கக்கூடிய மொழிக் கற்கைநெறிகளுடன் கூடிய செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- பசுமை நூலக எண்ணக்கரு தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய செயல்பாடுகளை முன்னெடுத்தல்.
- பாடசாலை / கல்வியியல் கல்லூரி மாணவர்களின் புதிய கண்டுப்பிடிப்புக்கள், புதியக் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை ஊக்குவிப்பதுடன் அவற்றை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நூலகத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் பற்றிய விவரங்கள் மற்றும் தகவல்களை இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் பிரச்சாரம் செய்தல். .(பாடசாலை / கல்வியல் கல்லூரி முகப்புத்தகத்தினூடாக)

04. செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்காக, சமூக விழிப்புணர்வை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல்.

05. நிதி

திட்டத்தை செயல்படுத்த எந்த முதலீடும் தேவையில்லை மற்றும் கிடைக்கக்கூடிய வளங்களைக் கொண்டு சேவைகளை திறமையாகவும் திறனாகவும் பயன்படுத்தினால் போதுமானது.

06. அறிக்கை தாயரித்தல்.

- மேற்கொள்ளப்பட்ட சகல நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக தெளிவான முறைமையான அறிக்கையொன்றினை (அச்சு / இருவெட்டு மூலம் தயாரிக்கப்பட்ட) அதிபரின் சிபாரிசுடன் 2024 பெப்ரவரி 29 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பிரிவுத் தலைவர், விரிவாக்கல் சேவைகள் பிரிவு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இலக்கம் 14, சுதந்திர வழி, கொழும்பு 07 எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

- வெற்றி பெற்ற நுலகங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக முதன்மையாகக் கருதப்படும் அறிக்கைக்கான மதிப்பெண்களை வழங்கும் போது, வாசிப்பை ஊக்குவித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமையளிக்க ஒரு முறைமையொன்று பின்பற்றப்படுகின்றது (மொத்த மதிப்பெண்களில் 75%). நூலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய சமூக சேவைகள் தொடர்பான தகவல்களுக்கு 25% மதிப்பெண்கள் வழங்கப்படும். விவசாயம் / சுற்றுச்சூழல் திட்டங்கள் போன்றவை)
- அறிக்கையினைத் தயாரிக்கும் போது அதன் வெளிப்புற அட்டை / புத்தகக் கட்டலிற்கு மேலதிக காலம் மற்றும் நிதி அவசியமில்லை. தேசிய வாசிப்பு மாதத்தின் தொனிப்பொருளுக்கு அமைவாக செய்யப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட வருடம் முழுவதும் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் தகவல்களை தனித்தனியான புகைப்படங்களுடன் மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய வேறு ஆதாரங்களுடன் முன்வைத்தல் போதுமானதாகும்.

## 07. மதிப்பீடு

தேசிய வாசிப்பு மாதத்தின் (2023) வினைத்திறன் மிக்க நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்திய நூலகங்களுக்கு 2024 ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தின் தேசிய விழாவின் போது பரிசுகள், சான்றிதழ் மற்றும் விருதுகள் வழங்கப்படும். மதிப்பீட்டு நடவடிக்கைகள் நூலக மட்டத்தில் செய்யப்படுகின்றன. இறுதியாக தேர்ந்தெடுக்கப்படும் நூலகங்கள் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் மதிப்புரை வழங்கப்பட்டதன் பின்னர் விருதுகளுக்கு உரித்துடைய நூலகங்கள் எவை என தீர்மானிக்கப்படும்.

Professor Nanda Dharmarathna
Chairman
National Library and Documentation Services Board
14, Independence Avenue
Colombo 07

பேராசிரியர் நந்த தர்மரத்ன
தலைவர்
தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

தொடர்புகளுக்கு :- தொலைபேசி இலக்கம் – 0714452620 / 0771236858
இணையத்தளம் – www.natlib.lk

## தேசிய வாசிப்பு மாத அறிக்கையினைத் தயாரிப்பதற்கான பொது வழிகாட்டி

| | | |
|---|---|---|
| முன் அட்டை தயாரித்தல் | - | தேசிய வாசிப்பு மாதம் 2023<br>அறிக்கையினை சமர்ப்பிக்கும் நூலகத்தின் பெயர் |
| உள்ளே முதல் பக்கம் | - | முகவரி மற்றும் நூலகத்திற்கான பிற சாத்தியமான இணைப்புகள்<br>(தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி இணையப் பக்கங்கள்) |
| பொருளடக்கம் | (1) | தேசிய வாசிப்பு மாதத்திற்காக நடத்தப்பட்ட விஷேட செயற்திட்டங்கள். |
| | - | நூலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட செயற்திட்டங்கள் |
| | (2) | இணைப்பு<br>மேற்படி செயற்திட்டத்திற்காக பங்குபற்றியவர்கள் - கையொப்ப ஆவணங்களின் நகல்கள்<br>(சான்றளிக்கப்பட்ட முதல் பக்கம் மற்றும் கடைசிப் பக்கம் போதுமானது)<br>நிகழ்ச்சியின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்<br>திட்டம் தொடர்பான சான்றிதழ்கள், விளம்பர துண்டு பிரசுரங்கள், செய்தித்தாள் விளம்பரங்கள் போன்றவற்றை இதன் கீழ் சேர்க்கவும். |

- தலைப்புப் பக்கம் மற்றும் பிரிந்துரைகள் என்பன கட்டாயம் தனி பக்கத்தில் தொடங்க வேண்டும். ஆனாலும் ஒவ்வொரு பிரிவையும் புதிய பக்கத்துடன் தொடங்குவது நல்லது.
- புகைப்படங்கள் உட்பட அனைத்து பக்கங்களும் வரிசையாக இலக்கமிடப்பட வேண்டும்.
- தேவையற்ற ஆடம்பரமான விளக்கக்காட்சிகள் / விடயங்களை உள்ளடக்க வேண்டாம்.